**செய்தி வெளியீடு எண் : 274** **நாள்: 25.02.2022**

## செய்தி வெளியீடு

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், உப்பாறு அணையிலிருந்து வலது மற்றும் இடது கரைகால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு வடகிழக்கு பருவமழை காரணமாக பயிரிடப்பட்டுள்ள பயிர்களை காப்பாற்றும் பொருட்டும், பொதுமக்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைக்காகவும் உப்பாறு அணையிலிருந்து **26.02.2022** முதல் 30.04.2022 முடிய 1 சுற்றுக்கு 7 நாட்கள் வீதம் 4 சுற்றுகளுக்கு மொத்தம் 453.90 மில்லியன் கனஅடிக்கு மிகாமல் தகுந்த இடைவெளிவிட்டு தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. .

இதனால், திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டத்திற்குட்பட்ட 6060 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்..

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**நீர்வளத் துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**